# TNPSC TET SI EXAM

## 15. 8ஆம் வகுப்பு Q அறிவியல் தேர்வு

8th Standard

1) காகிதம் எரிதல் என்பது ஒரு _____ மாற்றம்.

(a) இயற்பியல் (b) வேதியியல் (c) இயற்பியல் மற்றும் வேதியியல் (d) நடுநிலையான

2) தீக்குச்சி எரிதல் என்பது ______ அடிப்படையிலான வேதிவினைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

(a) இயல் நிலையில் சேர்தல் (b) மின்சாரம் (c) ஒளி (d) வினைவேக மாற்றி

3) _____ உலோகம் துருப்பிடித்தலுக்கு உள்ளாகிறது.

(a) வெள்ளீயம் (b) சோடியம் (c) காப்பர் (d) இரும்பு

4) வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பாக மாறுவதற்கு காரணமான நிறமி _______ .

(a) நீரேறிய இரும்பு II ஆக்சைடு (b) மெலனின் (c) ஸ்டார்ச் (d) ஓசோன்

5) பிரைன் என்பது ______ இன் அடர் கரைசல் ஆகும்.

(a) சோடியம் சல்பேட் (b) சோடியம் குளோரைடு (c) கால்சியம் குளோரைடு
(d) சோடியம் புரோமைடு

6) சுண்ணாம்புக்கல் ______ ஐ முதன்மையாகக் கொண்டுள்ளது.

(a) கால்சியம் குளோரைடு (b) கால்சியம் கார்பனேட் (c) கால்சியம் நைட்ரேட்
(d) கால்சியம் சல்பேட்

7) கீழ்காண்பவற்றுள் எது மின்னாற்பகுத்தலை தூண்டுகிறது?

(a) வெப்பம் (b) ஒளி (c) மின்சாரம் (d) வினைவேக மாற்றி

8) ஹேபர் முறையில் அம்மோனியா தயாரித்தலில் _________ வினைவேக மாற்றியாக செயல்படுகிறது.

(a) நைட்ரஜன் (b) ஹைட்ரஜன் (c) இரும்பு (d) நிக்கல்

9) மழை நீரில் கரைந்துள்ள சல்பர் டை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடுகள் ______ ஐ உருவாக்குகின்றன.

(a) அமிலமழை (b) கார மழை (c) அதிக மழை (d) நடுநிலை மழை

10) __________ புவி வெப்பமயமாதலுக்குக் காரணமாகின்றன.

(a) கார்பன் டை ஆக்சைடு (b) மீத்தேன் (c) குளோரோ புளூரோ கார்பன்கள்
(d) இவை அனைத்தும்

11) நுண்ணுயிரிகள்________ இல் அளவிடப்படுகின்றன.

(a) செமீ (b) மிமீ (c) மைக்ரான் (d) மீட்டர்

12) உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் பண்புகளைப் பெற்றவை_______

(a) புரோட்டோசாவா (b) வைரஸ் (c) பாக்டீரியா (d) பூஞ்சை

13) _______ ஒரு புரோகேரியாட்டிக் நுண்ணுயிரியாகும்.

(a) வைரஸ் (b) ஆல்கா (c) பூஞ்சை (d) பாக்டீரியா

14) பாக்டீரியாக்கள் வடிவத்தின் அடிப்படையில்______ பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(a) 2 (b) 3 (c) 4 (d) 5

15) மனிதருக்கு சாதாரண சளியை உண்டாக்கும் நுண்ணுயிரி _________ என அழைக்கப்படுகிறது.

(a) பிளாஸ்மோடியம் (b) இன்ஃபுளூயன்ஸா (c) விப்ரியோ காலரே (d) ஆப்தோ வைரஸ்

16) தூதுவளையின் இருசொற்பெயர் சொலானம் ட்ரைலோபேட்டம் ஆகும். இதில் சொலானம்' என்ற சொல் எதைக் குறிக்கிறது?

(a) சிற்றினம் (b) பேரினம் (c) வகுப்பு (d) துறைகள்

17) புளோரிடியன் ஸ்டார்ச் சேமிப்பு பொருளாகக் காணப்படும் பிரிவு.

(a) குளோரோஃபைசி (b) பியோஃபேசி (c) ரோடோஃபைசி (d) சயனோஃபைசி

18) உண்ணத் தகுந்த காளான்

(a) பாலிபோரஸ் (b) அகாரிகஸ் (c) பெனிசிலியம் (d) அஸ்பர்ஜில்லஸ்

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP – 8056206308

19) _________ மண் அரிப்பை தடுக்கும் தாவரங்கள்.

(a) பாசிகள் (b) பூஞ்சைகள் (c) பிரையோஃபைட்டுகள் (d) டெரிடோஃபைட்டுகள்

20) முதலாவது நிலத்தாவரங்கள்

(a) பிரையோஃபைட் டுகள் (b) டெ ரிடோ ஃபைட்டுகள் (c) ஜிம்னோஸ்பெர்ம்கள்
(d) ஆஞ்சியோஸ்பெர்ம்கள்

21) நன்கு வளர்ச்சியடைந்த வாஸ்குலார் திசுக்களைக் கொண்ட தாவர உடலம் காணப்படுவது

(a) பிரையோஃபைட்டுகள் (b) டெரிடோஃபைட்டுகள் (c) ஜிம்னோஸ்பெர்ம்கள்
(d) ஆஞ்சியோஸ்பெர்ம்கள்

22) இருசொற்பெயரிடு முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு______

(a) 1970 (b) 1975 (c) 1978 (d) 1623

23) பெனிசிலின் ஒரு உயிர் எதிர்பொருள். இது எதிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது?

(a) பாசிகள் (b) பூஞ்சைகள் (c) பிரையோஃபைட்டுகள் (d) டெரிடோஃபைட்டுகள்

24) கூட்டமைப்பாகக் காணப்படும் பாசி

(a) ஆசில்லடோரியா (b) நாஸ்டாக் (c) வால்வாக்ஸ் (d) குளோரெல்லா

25) ________என்பது உறுதியான, தடித்த வெண்ணிற உறையாக அமைந்து கண்ணின் உள்பாகங்களைப் பாதுகாக்கிறது.

(a) ஸ்கிளிரா (b) கண்ஜங்டிவா (c) கார்னியா (d) ஐரிஸ்

26) உடலின் உள் சூழ்நிலையை சீராகப் பராமரித்தல் _________ எனப்படும்.

(a) ஹோமியோஸ்டாசிஸ் (அ) தன்னிலை காத்தல் (b) ஹோமியோபைட்ஸ்
(c) ஹோமியோஹைனசிஸ் (d) ஹோமியோவிலிக்ஸ்

27) காற்றில்லா அல்லது ஆக்ஸிஜனற்ற சூழலில் குளுக்கோஸ் சிதைவடைந்து ________ ஐக் கொடுக்கும்

(a) லாக்டிக் அமிலம் (b) சிட்ரிக் அமிலம் (c) அசிட்டிக் அமிலம் (d) நைட்ரிக் அமிலம்

28) _______செல்கள் என்பது சிறப்பு வாய்ந்த செல்களாகும். அவை உடலின் எந்த செல்லாகவும் மாற இயலும்.

(a) நரம்பு (b) மூல (c) இதய (d) எலும்பு

29) நுரையீரலுக்கு உள்ளேயும் வெளியேயும் வாயுப் பரிமாற்றம் நடைபெறும் நிகழ்விற்கு _________ என்று பெயர்.

(a) உட்சுவாசம் (b) வெளிச்சுவாசம் (c) சுவாசம் (d) ஏதுமில்லை

30) சவ்வூடு பரவலின் மூலம் கரைசலின் இடப்பெயர்ச்சி__________

(a) செறிவுமிக்க கரைசலிலிருந்து செறிவு குறைவான கரைசலுக்குச் செல்லும்
(b) செறிவு குறைவான கரைசலிலிருந்து செறிவு மிக்க கரைசலுக்குச் செல்லும்.
(c) இரு நிகழ்வும் நடைபெறும் (d) இவற்றில் ஏதுமில்லை

31) சைட்டோபிளாசத்தை விட குறைந்த கரைபொருள் செறிவும், அதிக நீர் செறிவும் உள்ள ________கரைசலில் இரத்த சிவப்பணுக்கள் உள்ளன.

(a) குறை செறிவு கரைசல் (b) மிகை செறிவு கரைசல் (c) நடுநிலைக்கரைசல்
(d) அமிலக் கரைசல்

32) ஒரு வேதிவினையில் வினைபடுபொருள்கள் → ____

33) சுட்ட சுண்ணாம்பு நீருடன் தொடர்பு கொள்ளும்போது ________ உருவாகிறது.

34) தீப்பெட்டியின் பக்கவாட்டில் ________ உள்ளது.

35) மின்னாற் பகுத்தல் என்ற சொல் _______ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

36) வெப்பத்தின் மூலமே நிகழக்கூடிய வினைகள் ________ எனப்படும்.

37) நறுக்கிய ஆப்பிளில் காணப்படும் பழுப்பு நிறமி ________

38) தீக்குச்சியின் தலைப்பகுதியில் ________ , _________ உள்ளது.

39) லெட் நைட்ரேட் உப்பினை வெப்பப்படுத்தும் பொழுது வெளிவரும் செம்பழுப்பு நிற வாயு ___________ ஆகும்.

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP – 8056206308

40) _________ சுட்ட சுண்ணாம்பு, சிமெண்ட் ஆகியவற்றுக்கு மூலப்பொருள் ஆகும்.
41) _________ ஒளியினால் நிகழும் வேதிவினைகளைப் பற்றியதாகும்.
42) _________ விவசாயத்தில் ஒரு முக்கியமாக உரமாகும்.
43) மாசுபடுதலை நிகழ்த்தும் பொருள்கள் _________ எனப்படும்.
44) சல்பியூரிக் அமிலம், சோடியம் ஹைட்ராக்சைடு உடன் இணையும் வேதிவினை _________ ஆகும்.
45) மெக்னீசியம் நீர்த்த அமிலங்களுடன் வினைபுரியும் பொழுது ________ வை வெளிவிடுகின்றன.
46) ________ என்பது மின்சாரத்தின் மூலம் வேதிவினைகளை நிகழ்த்துவது ஆகும்.
47) _________ உயிரி வினைவேக மாற்றிகள் எனப்படும்.
48) ________ தடுப்பூசி வாய் மற்றும் கால்க் குளம்பு குணப்படுத்துகிறது.
49) ________ நுண்ணுயிரி ரேபிஸ் பரவ காரணமாகிறது.
50) குழந்தைப் பருவத்து மலச்சிக்கலை குணப்படுத்த பயன்படுவது ________
51) ________ எனும் ஈக்கள் கடிப்பதன்மூலம் ஆப்பிரிக்க தூக்கவியாதி உண்டாகிறது.
52) ________ நிறமி பழுப்பு நிறத்தை தருகிறது.
53) வைரஸின் உறையில் ________ போன்ற அமைப்புகள் உள்ளன. இவை வைரஸ் துகள்கள் ஓம்புயிரி செல்களில் ஒட்டிக் கொள்ள உதவுகின்றன.
54) ________ சாயம் பாக்டீரியாவை நுண்ணோக்கியில் பார்ப்பதற்கு முன் சேர்க்கப்படுகிறது.
55) ஆல்காக்கள் பொதுவாக _________ வடிவமுடையவை.
56) ஆப்பிரிக்க தூக்க வியாதி _________ ஆல் உண்டாகிறது.
57) _________ வாய் மற்றும் கால்க்குளம்பு நோயை உண்டாக்குகிறது.
58) இளைஞர்களிடத்தில் மாய தோற்றத்தை ஏற்படுத்தும் பூஞ்சை ________
59) பெனிசிலின் ________ பூஞ்சையிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
60) ஸ்பேக்னம் எனும் தாவரத்திலிருந்து கிடைக்கும் நிலக்கரியைப் போன்ற எரிபொருள் ________
61) வயிற்றுப் புண்ணுக்குரிய மருந்தாகப் பயன்படுவது.________
62) சில பூஞ்சைகள் கூட்டுயிரிகளாக உயிர் தாவரங்களின் வேர்களுடன் இனைந்து வளர்வது ________
63) இந்தியாவில் மிகப் பெரிய உலர்தாவரத் தொகுப்பு _______ இல் உள்ளது.
64) ஈஸ்ட் ________ மற்றும் ________ செல் அமைப்பைக் கொண்டவை.
65) ________ என்ற பூஞ்சையானது ஒவ்வாமையிலிருந்து பாதுகாக்கிறது.
66) _________ வட்ட வடிவமான கொப்பளங்களை தோலில் தோற்றுவிக்கின்றன.
67) ________ குழந்தைக்கு ஒரு முறை பயன்படுத்தும் அரைக்கச்சையில் பயன்படுத்தப்பட்டு வந்தது.
68) _________ கிளப் பாசி என அழைக்கப்படுகிறது.
69) _________ குதிரைவால் என அழைக்கப்படுகிறது.
70) பிரையோஃபைட்டின் _________ வகுப்பில் புரோட்டோனீமா நிலை காணப்படுகிறது,
71) பிரையோஃபைட்டுகளில் _________ கேமீட்டோஃபைட் சந்ததியின் முதல் செல் ஆகும்.
72) ஊடுபரவல் ஒழுங்குபாடு என்ற பதம் _________ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
73) குரல்வளை என அழைக்கப்படுவது ________
74) ஆற்றலானது ________ வடிவில் செல்களால் பயன்படுத்தப்படுகிறது.
75) ________ என்பது செல்லின் செயல்பாடுகளுக்குத் தேவையான ஆற்றலை உருவாக்கும் நிகழ்ச்சி ஆகும்.
76) நுரையீரலை சுற்றியிருக்கும் உறை _______
77) ________ மற்றும் ________ ஊடுகலப்பு ஒத்தமைவான்களுக்கு எடுத்துக்காட்டாகும்.
78) ________ கீழ்நிலை மட்ட உயிரினங்களிலிருந்து உயர் நிலை மட்ட உயிரினங்கள் வரை வெவ்வேறாக உள்ளது.
79) செல்களைப் பற்றிய படிப்பு _________ எனப்படும்
80) மிக நீண்ட செல் _________ ஆகும்.
81) கிளைத்த செல்லிற்கு உதாரணம் _________ ஆகும்.
82) எளிய திசு _________ தன்மைக் கொண்டது.

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP - 8056206308

83) பாதுகாப்பு பணியை மேற்கொள்ளும் திசுக்கள் __________ ஆகும்.

84) மனிதக் கண்ணால் __________ நிறங்களை வேறுபடுத்திப் பார்க்க இயலும்.

85) தொண்டைக்கும், மூச்சுக் குழாய்க்கும் இடையே சிறிய காற்றுப் பாதையாக __________ காணப்படுகிறது.

86) _________ முறையின் மூலம் உணவுப் பொருள்கள் செரிமான நொதியுடன் கலக்கின்றன.

87) ரொட்டி மிருதுவாகவும் உப்பியும் காணப்படுவதற்கு கோதுமை மாவுடன் ஈஸ்ட் சேர்க்கப்படுவதால்________வெளியிடப்படுகிறது.

MATCH

| | |
|---|---|
| 88) சையனோஃபைசி | (1) நீலநிறம் |
| 89) குளோரோஃபைசி | (2) நீலப்பச்சைப் பாசி |
| 90) பெயோஃபைசி | (3) பச்சைநிறம் |
| 91) ரோடோஃபைசி | (4) பழுப்புப் பாசி |
| 92) தாமிர கார்பனேட் | (5) கார்பன் டை ஆக்ஸைடு |
| 93) பெர்ரிக் ஆக்சைடு | (6) ஹைட்ரஜன் |
| 94) சில்வர் குளோரைடு | (7) சில்வர் குளோரைடு + சோடியம் நைட்ரேட் |
| 95) தாமிர சல்பேட் | (8) சிவப்புப் பாசி |
| 96) சில்வர் நைட்ரேட் கரைசல் + சோடியம் குளோரைடு கரைசல் | (9) செம்பழுப்பு நிறம் |
| 97) துத்தநாகம் + நீர்த்த அமிலம் | (10) பச்சைப் பாசி |
| 98) கால்சியம் ஆக்சைடு + நீர் | (11) கால்சியம் ஹைட்ராக்சைடு + வெப்பம் |
| 99) நீர்த்த ஹைட்ரோகுளோரிக் அமிலம் + சோடியம் கார்பனேட் | (12) வெண்மைநிறம் |

100) **கூற்று (A):** லெட்நைட்ரேட் சிதைவடைதல் வினை ஒரு வெப்ப கொள் வினை ஆகும்.
**காரணம் (R):** நைட்ரஜன் டை ஆக்சைடு ஒரு செம்பழுப்பு நிற வாயு.
அ) A மற்றும் R சரி, R ஆனது A ஐ விளக்குகிறது.
ஆ) A சரி ஆனால் R தவறு.
இ) A தவறு ஆனால் R சரி.
ஈ) A மற்றும் R சரி, ஆனால் R ஆனது A ஐ விளக்கவில்லை.

101) **கூற்று (A):** ஆப்பிள்களும், வேறு சில பழங்களும் நறுக்கிய பின் காற்றில் உள்ள ஆக்சிஜனுடன் வினைபுரிந்து பழுப்பு நிறத்தை அடைகின்றன.
**காரணம் (R):** இப்பழங்களிலுள்ள பீனாலிக் சேர்மங்கள் பழுப்பு நிற மெலனினாக ஆக்சிஜனேற்றம் அடைகின்றன.
அ) A மற்றும் R சரி, R ஆனது A ஐ விளக்குகிறது.
ஆ) A சரி ஆனால் R தவறு.
இ) A தவறு ஆனால் R சரி.
ஈ) A மற்றும் R சரி, ஆனால் R ஆனது A ஐ விளக்கவில்லை.

102) கூற்று: வேதியியல் மாற்றங்களை வேதிவினைகள் என்று அழைக்கலாம்.
காரணம்: இம்மாற்றங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்கள் வினைக்குட்பட்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களை உருவாக்குகின்றன.
அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் தருகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமன்று.
இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஈ) கூற்று தவறானது. ஆனால், காரணம் சரியானது.

103) கூற்று: ஒரு தீக்குச்சியை தீப்பெட்டியின் பக்கவாட்டில் தேய்க்கும் பொழுது வேதிவினை நிகழ்ந்து வெப்பம், ஒளி, ஒலி மற்றும் புகை உருவாகிறது.
காரணம்: தீக்குச்சியின் தலைப்பகுதியில் பொட்டாசியம் குளோரேட்டும், ஆன்டிமணி டிரைசல்பைடும் உள்ளது. தீப்பெட்டியின் பக்கவாட்டில் சிவப்பு பாஸ்பரஸ் உள்ளது.
அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் தருகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமன்று.
இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஈ) கூற்று தவறானது. ஆனால், காரணம் சரியானது.

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP – 8056206308

104) கூற்று: ஓசோன் உருவாதல் வளிமண்டலத்தில் நிகழும் ஒளிவேதிவினை ஆகும்.
காரணம்: சூரிய புறஊதாக்கதிர்கள் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்து மூலக்கூறு ஆக்சிஜனையும், அணு ஆக்சிஜனையும் தருகிறது. இந்த அணு ஆக்சிஜன் மீண்டும் சூரிய புறஊதாக்கதிர்கள் மூலம் ஆக்சிஜனேற்றம் அடைந்து ஓசோனாக மாறுகிறது.
அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் தருகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமன்று.
இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஈ) கூற்று தவறானது. ஆனால், காரணம் சரியானது.

105) கூற்று: ஹேபர் முறையில் அம்மோனியா தயாரிக்க உலோக இரும்பு வினைவேக மாற்றியாக பயன்படுத்தப்படுகிறது.
காரணம்: வனஸ்பதி நெய் தயாரித்தலில் நன்கு தூளாக்கப்பட்ட நிக்கல் வினைவேக மாற்றியாக செயல்படுகிறது.
அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் தருகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமன்று.
இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஈ) கூற்று தவறானது. ஆனால், காரணம் சரியானது.

106) கூற்று: பித்தளைப் பாத்திரங்கள் நிறம் மங்குகின்றன.
காரணம்: பித்தளையில் உள்ள தாமிரம் நெடுநேரம் வளிமண்டல காற்றுடன் தொடர்புக்கு வரும் பொழுது தாமிர கார்பனேட்டையும் தாமிர ஹைட்ராக்ஸைடையும் உருவாக்குகின்றன.
அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் தருகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமன்று.
இ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஈ) கூற்று தவறானது. ஆனால், காரணம் சரியானது.

107) **கூற்று:** திரவ உணவுகளை பாதுகாக்கும் முறையே பதப்படுத்துதல் ஆகும்.
**காரணம்:** பாலை $70^{\circ}$ செ. வெப்பநிலைக்கு சூடேற்றும்போதும், பின் $10^{\circ}$ செ. வெப்ப நிலைக்கு குளிர்விக்கும் போதும் பாக்டீரியாக்கள் கொல்லப்படுகின்றன.

108) **கூற்று:** காளானில் ஹைபாக்கள் சுவர்கள் புரதம் மற்றும் கொழுப்பினால் ஆனது.
**காரணம்:** மைசீலியம் நூல் போன்ற அமைப்புடைய ஹைபாக்களால் ஆனது.

109) கூற்று : பெனிசிலின் ஒரு உயிரெதிர்பொருள்,பெனிசிலியம் நொட்டேட்டம் என்ற பூஞ்சையிலிருந்து பெறப்படுகிறது.
காரணம் : இது மற்ற நுண்ணுயிரிகளை கொல்லும் அல்லது வளர்ச்சியை தடை செய்யும்.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

110) கூற்று : செயற்கை முறை வகைபாடு இனப்பெருக்க வகைபாடு என்றும் அழைக்கப்படுகிறது.
காரணம் : செயற்கை முறை வகைபாடு உடல பண்புகளை அடிப்படையாகக் கொண்டது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP - 8056206308

111) கூற்று : தாவர உலகத்தில் பிரையோபைட்டுகள் நீர் நில வாழ்வன என்று அழைக்கப்படுகிறது.
காரணம் : பிரையோ ஃபைட்டுகள் நில வாழ்த் தாவரங்கள் ஆனால் இவைகள் தன் வாழ்க்கை சுழற்சியை நிறைவு செய்ய நீர் தேவைப்படுகிறது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

112) கூற்று (A): சில பாசிகள் குழுவாகச் சேர்ந்து வாழும் தன்மை கொண்டவை.
காரணம் (R): பாசிகள் உடலானது ஒரு செல் அல்லது பல செல்களால் ஆனது.
அ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
ஆ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
இ. கூற்று சரி. காரணம் தவறு.
ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

113) கூற்று (A): ஜிம்னோஸ்பெர்மில் நன்கு வளர்ச்சி அடைந்த கடத்தும் திசுக்கள் உள்ளன.
காரணம் (R): நீரைக் கடத்தக்கூடிய திசு ட்ராக்கீடுகளாகும். உணவைக் கடத்தக் கூடியது சல்லடை சொல்லாகும்.
அ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
ஆ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
இ. கூற்று சரி. காரணம் தவறு.
ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

114) கூற்று : பாசிகள் தாலோஃபைட்டா வகையைச் சார்ந்தவை.
காரணம் : தாலஸ் என்று அழைக்கப்படும் தாவர உடலமானது வேர், தண்டு, இலை என வேறுபடுத்தப்பட்டுள்ளது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

115) கூற்று : பூஞ்சைகளில் உணவுப் பொருளானது கிளைக்கோஜனாகவும் எண்ணெயாகவும் சேமிக்கப்படுகின்றன.
காரணம் : பூஞ்சைகளில் பச்சையம் கிடையாது. இவை பிறச்சார்பு உயிரிகள் எனப்படும்.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

116) கூற்று : ஒட்டுண்ணிகள் உயிருள்ள பொருள்களிலிருந்து உணவைப்பெறுகின்றன.
காரணம் : செர்க்கோஸ்போரா பெர்சனேட்டா உறிஞ்சு உறுப்புகள் மூலம் உணவைப் பெறுகிறது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP – 8056206308

117) கூற்று : R.H. விக்டேக்கரின் ஐந்து உலக வகைப்பாட்டில் பூஞ்சைகள் இரண்டாவது உலகமாக இடம் பெற்றுள்ளன.
காரணம் : இவற்றில் பச்சையம் மற்றும் தரசம் இல்லை.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

118) கூற்று : கேமீட்டோஃபைட்டிக் தாவரமானது மாசஸ் இலை போன்றது.
காரணம் : வளர்தளத்துடன் பிரையோஃபைட்டா தாவரமானது மைக்கோரைசா வேர்கள் மூலம் நிலையாக ஊன்றப்படுகிறது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மட்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரியானது. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானவையல்ல.
உ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
ஊ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.

119) கூற்று(A): மூலக்கூறுகள் அதிக செறிவுடைய பகுதியிலிருந்து, குறைந்த செறிவுடைய பகுதிக்கு தானாகவே இடப்பெயர்ச்சி அடைவது பரவல் எனப்படும்.
காரணம்(R): எரியும் ஊதுபத்தியின் மணம் அறை முழுவதும் பரவல் எனப்படும்.
அ. கூற்று(A) மற்றும் காரணம்(R) இரண்டும் சரி.
ஆ. கூற்று(A) மற்றும் காரணம்(R) இரண்டும் தவறு.
இ. கூற்று சரி. காரணம் தவறு.
ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

120) கூற்று(A): விழித்திரை கண்ணின் இரண்டாவது அடுக்கு.
காரணம்(R): இதில் கூம்பு மற்றும் குச்சி செல்கள் இருப்பதால் ஒளியால் மிகுந்த தூண்டல் அடையக் கூடியது.
அ. கூற்று(A) மற்றும் காரணம்(R) இரண்டும் சரி.
ஆ. கூற்று(A) மற்றும் காரணம்(R) இரண்டும் தவறு.
இ. கூற்று சரி. காரணம் தவறு.
ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

121) கூற்று : அமீபா போன்ற ஒரு செல் உயிரினங்கள் உயர்நிலை உயிரினங்களைப் போன்று அனைத்து உயிர் செயல்களையும் செய்கின்றன.
காரணம் : செல் என்பது உயிரினங்களில் குறிப்பிட்ட செயலை செய்யத் தகுந்த மிகச் சிறிய செயல் அலகு ஆகும்.
அ) கூற்றும் காரணமும் சரி. மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

122) கூற்று : வெவ்வேறு விலங்குகளில் செல்களின் அளவு மாறுபடுகிறது. இது மைக்ரான் என்ற அலகால் அளக்கப்படுகிறது.
காரணம் : மனித உடலின் மிகச்சிறிய செல் இரத்த வெள்ளையணு மற்றும் மிக நீண்டசெல் நரம்பு செல் ஆகும்.
அ) கூற்றும் காரணமும் சரி. மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

123) கூற்று : எளிய திசுக்கள் ஒரே வகையான செல்களால் ஆனவை. எ.கா. குடல் திசு
காரணம் : கூட்டுத்திசு பல்வேறு வகையான செல்களைக் கொண்டவை,
அ) கூற்றும் காரணமும் சரி. மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP – 8056206308

124) கூற்று : நாசிக்குழியின் உட்புறச்சுவர் நுண்ணிய ரோமங்கள் மற்றும் கோழைச் சுரப்பு செல்களால் ஆனது. இவை ஒட்டும் தன்மை மற்றும் ஈரப்பதத்தையும் உருவாக்குகின்றன.
காரணம் : மூக்கில் உள்ள இரத்த நாளங்கள் உள் இழுக்கப்படும் காற்றை வெப்பமாக வைத்துக்


இது போன்ற தேர்வுகள் தினமும் என்னுடைய வாட்ஸாப்ப் குரூப்பில் மட்டுமே வெளிவரும் .
இதன் விடைகளை எனது வெப்சைட் www.ravitestpapers.com ல் பார்க்கலாம் .
வாட்ஸாப்ப் குரூப்பில் இணைய 8056206308 என்ற எண்ணிற்கு வாட்ஸாப்ப் செய்யவும் அல்லது எனது பிளாக்கர் www.ravitestpapers.in ல் உள்ள லிங்கை க்ளிக் செய்து இணையலாம்

# TNPSC SALES
# 6 TO 10TH

CLASS 6 TO 10 SCIENCE MCQS ANSWERS 524 PAGES

CLASS 6 TO 10 SOCIAL SCIENCE MCQS ANSWERS 641 PAGES

CLASS 6 TO 10 அறிவியல் MCQ ANSWERS 403 PAGES

CLASS 6 TO 10 சமூக அறிவியல் MCQ ANSWERS 745 PAGES

EACH PDF COST RS.500

RAVI TEST PAPERS & NOTES
WHATSAPP – 8056206308